DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

STC No. 2282/2019

PROSECUTION WITNESS L.W. 6/P.W. 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாலதி | Caste | : | |
| Father's Name | : | சதீஸ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

(1,2 எதிரிகள் ஆஜர் )

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 28-11-2023.

**முதல் விசாரணை**

1. நான் சின்னயம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். வீட்டுக் குடித்தனம்.

2. அ.சா.1 கனகராஜை எனக்கு தெரியும். இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை :

**குறுக்கு விசாரணை :**

**1.** 05.02.2018 - ம் தேதி பகல் 01.45 மணிக்கு என்னுடைய தாயார் தொடர்பு கொண்டு கனகராஜையும், காஞ்சனாவையும் ஆஜர் எதிரிகள் அடித்துவிட்டார்கள் என்றும், சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்று கூறினார் என்றால் இல்லை. நான் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார் என்றால் இல்லை. நான் சம்பவத்தை பட்டு கேள்விபட்டுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.